வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.825/ஆ4/2025, நாள். 28.02.2025

-----

பொருள்: தேசிய பசுமைப்படை சார்பாக 04.03.2025 அன்று ஒரு நாள் (Environment Exhibition) நடத்துதல் – பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியில் பங்கேற்க தகவல் தெரிவித்தல் – சார்பாக.

பார்வை: Chennai, Department of Environment and Climate Change Letter R.C.032844/M1/E1/2024, Dated. .11.2024

-----

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் அவர்களின் உதவி மற்றும் வழிகாட்டுதலின்படி வேலூர் மாவட்ட தேசிய பசுமைப்படை சார்பாக ஒரு நாள் (Environment Exhibition) வேலூர், டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளியில் 04.03.2025ல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் பங்கேற்கும் 60 பள்ளிகளுக்கும் தலா ரூ.1000/– வீதம் வழங்கப்படும். மேலும் உணவு மற்றும் புத்தாக்க உணவு வழங்கப்படும். பங்கேற்பாளர்களுக்கு சான்றுகள் வழங்கப்படும். இதில் முதல் பரிசு ரூ.10000/– இராண்டாம் பரிசு ரூ.8000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ.7000/– வீதம் வழங்கப்படவுள்ளது. இது தவிர ஆறுதல் பரிசு இரண்டு Exhibits–களுக்கு ரூ.5000/– வீதம் பரிசாக சான்றுகளுடன் வழங்கப்படவுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு/நகராட்சி/நியுதவி/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் (அரசு தேர்வு எழுதும் வகுப்புகளை சேர்ந்த மாணவர்களை தவிர்த்து) 60 பள்ளிகள் தேர்வு செய்யும் பொருட்டு சுற்றுச்சூலுல் மாடல்/ செயல் மாடல்கள் செய்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வகையில் மாணவர்களை அழைத்து சென்றுவருமாறு அனைத்து தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :–
ஒன்றிய வாரியாக பள்ளிகளின் பெயர் பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்,
அரசு/நகராட்சி/நியுதவி/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.